ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ மும்மணிக்கோவை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ மும்மணிக்கோவை ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡அருள் தரும் அடியவர் பால் மெய்யை வைத்துத்⋆
தெருள் தர நின்ற தெய்வநாயக!⋆ நின்
அருள் எனும் சீர் ஓர் அரிவையானதென⋆
இருள் செக எமக்கோர் இன் ஒளி விளக்காய்⋆
மணிவரை அன்ன நின் திரு உருவில்⋆
அணி அமர் ஆகத்தலங்கலாய் இலங்கி⋆
நின் படிக்கெல்லாந் தன் படி ஏற்க⋆
அன்புடன் நின்னோடவதரித்தருளி⋆
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து⋆
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று⋆
தன் அடி சேர்ந்த தமர் உனை அணுக⋆
நின்னுடன் சேர்ந்து நிற்கு நின் திருவே (1)

திருமால் அடியவர்க்கு மெய்யனார்⋆ செய்ய
திருமாமகள் என்றும் சேரும்⋆ திருமார்பில்
இம் மணிக்கோவை உடன்⋆ ஏற்கின்றார் என் தன்⋆ இம்
மும்மணிக்கோவை மொழி (2)

மொழி வார் மொழிவன மும்மறை ஆகும்⋆ அயிந்தையில் வந்து⋆
இழி வார் இழிக என்று⋆ இன் அமுதக் கடலாகி நின்ற⋆
விழி வார் அருள் மெய்யர்⋆ மெல்லடி வேண்டிய மெல்லியல் மேல்⋆
பொழி வார் அனங்கர் தம்⋆ பூங்கரும்புந்திய பூ மழையே (3)

www.prapatti.com

மழையில் எழுந்த மொக்குள் போல் வையம்⋆
அழிய ஒன்றழியா அடியவர் மெய்ய⋆
அரு மறையின் பொருள் ஆய்ந்தெடுக்குங்கால்⋆
திருவுடன் அமர்ந்த தெய்வநாயக⋆
நின் திருத் தனக்கு நீ திருவாகி⋆
இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை⋆
நந்துதல் இல்லா நல் விளக்காகி⋆
அந்தம் இல் அமுத ஆழியாய் நிற்றி⋆
பாற்கடல் தன்னில் பன்மணி அன்ன⋆
சீர்க் கணம் சேர்ந்த சீலம் எல்லை இலை⋆
அடியவர் பிழைகள் நின் கருத்தடையாது⋆
அடைய ஆண்டருளும் அரசனும் நீயே⋆
உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை⋆
அயிந்தை மா நகரில் அமர்ந்தனை எமக்காய்ச்⋆
சித்திர மணி எனத் திகழு மன் உருவில்⋆
அத்திரம் அணி என அனைத்தும் நீ அணுகி⋆
விண்ணுள் அமர்ந்த வியன் உருவதனால்⋆
எண்ணிய ஈர் இரண்டுருக்களும் அடைதி⋆
பன்னிரு நாமம் பல பல உருவாய்⋆
இன் உரு எங்கும் எய்தி நீ நிற்றி⋆
மீனோடாமை கேழல் கோளரியாய்⋆
வானார் குறளாய் மழுப்படை முனியாய்ப்⋆
பின்னும் இராமர் இருவராய்ப் பாரில்⋆
துன்னிய பரம் தீர் துவரை மன்னனுமாய்க்⋆
கலி தவிர்த்தருளும் கற்கியாய் மற்றும்⋆
மலிவதற்கெண்ணும் வல்வினை மாற்ற⋆
நானா உருவம் கொண்டு நல் அடியோர்⋆
வானார் இன்பம் இங்குற வருதி⋆
ஓர் உயிர் உலகுக்கென்னு நீ திருவொடு⋆
ஏர் உயிர் எல்லாம் ஏந்தி இன்புறுதி⋆
யாவரும் அறியாதெங்கு நீ கரந்து⋆
மேவுருச் சூழ்ந்து வியப்பினால் மிகுதி⋆



www.prapatti.com

கொண்டிட எம்மை அடைக்கலம் உலகில்⋆
கண்டிலம் கதி உனை அன்றி மற்றொன்றும்⋆
பல் வகை நின்ற நின் படி அனைத்தினும்⋆
தொல் வகை காட்டும் துணிந்து தூ மறையே (4)

தூமறையின் உள்ளம்⋆ துளங்காத் துணிவு தரும்⋆
ஆம் அறிவால் ஆர்ந்தடிமை ஆகின்றோம்⋆ பூ மறையோன்
பாராயணத்தில்⋆ பணியும் அயிந்தை நகர்⋆
நாராயணனார்க்கே நாம் (5)

ஆர்க்கும் கருணை பொழிவான்⋆ அயிந்தையில் வந்தமர்ந்த⋆
கார்க்கொண்டலைக் கண்ட காதல்⋆ புனமயில் கண் பனியா⋆
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும்⋆ வெள்கி வெவ்வுயிர்க்கும்⋆
பார்க்கின்றவர்க்கிது⋆ நாம் என் கொல் என்று பயிலுவமே (6)

பயின் மதி நீயே பயின் மதி தருதலின்⋆
வெளியும் நீயே வெளி உற நிற்றலின்⋆
தாயும் நீயே சாயை தந்துகத்தலின்⋆
தந்தையும் நீயே முந்தி நின்றளித்தலின்⋆
உறவும் நீயே துறவாதொழிதலின்⋆
உற்றதும் நீயே சிற்றின்பம் இன்மையின்⋆
ஆறும் நீயே ஆற்றுக்கருள்தலின்⋆
அறமும் நீயே மற நிலை மாய்த்தலின்⋆
துணைவனும் நீயே இணை இலையாதலின்⋆
துய்யனும் நீயே செய்யாள் உறைதலின்

காரணம் நீயே நாரணன் ஆதலின்⋆
கற்பகம் நீயே நற்பதம் தருதலின்⋆
இறைவனும் நீயே குறை ஒன்றிலாமையின்⋆
இன்பமும் நீயே துன்பம் துடைத்தலின்⋆
யானும் நீயே யென்னுள் உறைதலின்⋆
எனதும் நீயே உனதன்றி இன்மையின்⋆
நல்லாய் நீயே பொல்லாங்கிலாமையின்⋆
வல்லாய் நீயே வையம் உண்டுமிழ்தலின்⋆


www.prapatti.com

எங்ஙனம் ஆகும் மெய்ய நின் இயல்பெ⋆
    அங்ஙனே ஒக்க அறிவதாரணமே (7)

ஆரணங்கள் தேட⋆ அயிந்தைநகர் வந்துதித்த⋆
    காரணராய் நின்ற⋆ கடல் வண்ணர்⋆ நாரணனார்
இப்படிக்கு⋆ மிக்கன்றெடுத்த பாதம் கழுவ⋆
    மெய்ப் படிக்கம் ஆனது பொன் வெற்பு (8)

‡வெற்புடன் ஒன்றி அயிந்தையில்⋆ வெவ்வினை தீர் மருந்தொன்று⋆
    அற்புதமாக அமர்ந்தமை கேட்டு⋆ அருள் வேண்டி நிற்கப்⋆
பற்பில் அமர்ந்த செய்யாள்⋆ படி காட்டிய பண்புடை⋆ எம்
    விற்புருவக் கொடிக்கு⋆ ஓர் விலங்கா மயல் பெற்றனமே (9)

‡பெற்றனை நீயே மற்றுளதெல்லாம்⋆
    பெறுவது நின்னை உறுவது கொள்வார்⋆
நின்னால் அன்றி மன்னார் இன்பம்⋆
    நின் பொருட்டு நீ என் பொருட்டில்லை⋆
நின் உருநின்று மின் உருத் தோன்றும்⋆
    நின் தனக்கு நிகர் நின்னடி அடைவார்⋆
நின் பால் அன்றி அன்பால் உய்யார்⋆
    வாரணம் அழைக்க வந்த காரணனே (10)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com